செய்திக்குறிப்பு.117 நாள் 8.10.2010

# சென்னையில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வணிக வளாகம் அன்னை தெரசா மகளிர் வணிக வளாகம் என்று பெயர் சூட்டப்பட்டு நவம்பர் 1ஆம் தேதி முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறக்கப்படும் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தகவல்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (8.10.2010) சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியை துவக்கி வைத்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது :

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக தமிழக அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாநில அளவில் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தொழில்திறன், உற்பத்திப் பொருட்களின் வகைகள் மற்றும் அவர்கள் தம் ஆற்றலை வெளியுலகிற்கு உணர்த்திடவும், பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தி நல்ல விலைக்கு விற்பனைச் செய்யவும் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு சென்னையில் மாநில அளவில் நடைபெற்ற இரண்டு கண்காட்சிகளில் ரூபாய் 2 கோடியே 99 இலட்சம் மதிப்பிலான பொருட்களும், மாநில முழுவதும் நடைபெற்ற பல்வேறு கண்காட்சிகளின் மூலம் ரூபாய் 17 கோடியே 52 இலட்சம் மதிப்பிலான பொருட்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு, மாநில அளவில் இரண்டு விற்பனைக் கண்காட்சிகளும், மாவட்ட அளவில் 62 திட்டமிட்ட கண்காட்சிகளும், 134 விருப்ப கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. சுயஉதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்கு மாவட்ட அளவில் 29 வணிக வளாகங்களும், 22 கூடுதல் வணிக வளாகங்களும் மற்றும் 256 கிராம அங்காடி வணிக வளாகங்களும் கட்டப்பட்டு, இவ்வளாகங்களில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தயாரித்த பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. தற்போது 90 கிராம அங்காடிகள் கட்டப்பட்டு வருகின்றது. மாநில அளவில் மகளிர் சுயஉதவிக்குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்ய சென்னை, வள்ளுவர் கோட்டத்தின் அருகில் வணிக வளாகம் சுமார் ரூபாய் 15 கோடியே 30 இலட்சம் செலவில் அமைத்திட முடிவு செய்யப்பட்டு ஜனவரி மாதம் 2009 முதல் பணிகள் நடைபெற்று வருகிறது. நான்கு தளங்களைக் கொண்ட இந்த வளாகத்தில், விற்பனைக்காக இரண்டு தளங்களும், நூலகம், சமையலறை, அலுவலக உபயோகத்திற்காகவும், வெவ்வேறு தளங்கள் உள்ளன. இப்பணிகள் தற்போது முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் வருகின்ற நவம்பர் 1ஆம் தேதி தொடங்கப்படவுள்ளது. தலைவர் கலைஞரிடம் நாங்கள் இந்த வளாகத்தை திறக்க தேதி கேட்டப்போது, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு நாம் அன்னை தெரசா நூற்றாண்டை கொண்டாடவுள்ளோம். எனவே, இந்த வளாகத்திற்கு அன்னை தெரசா மகளிர் வளாகம் என்று பெயர் சூட்டுங்கள் எனத் தெரிவித்தார். இதன்படி, வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வணிக வளாகம் அன்னை தெரசா மகளிர் வணிக வளாகம் என்று பெயர் சூட்டப்பட்டு நவம்பர் 1ஆம் தேதி தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.